மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

29.09.2022 வியாழக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

## விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் 22ஆவது திருத்தச் சட்டமூலம்



அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தினை எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற அலுவல்கள் பற்றியக் குழுக் கூட்டம் இன்று(வியாழக்கிழமை) காலை இடம்பெற்றது. இதன்போதே இதுதொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 17 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்

கடந்த 18 மாதங்களில் 12 சிறுவர்கள் உடல், உள ரீதியான தாக்குதல்கள், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில், 2 வருடங்களில் 17 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர் என வைத்தியர் துஷ் விக்ரமநாயக்க தெரிவித்தார். இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ஆபத்தான கட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களின் போசாக்கு

மட்டு மாவட்டத்தில் மாணவர்களின் போசாக்குதன்மை ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. இதனை கட்டுப்படுத்தாவிடின் பாரிய விளைவு ஏற்படும் என மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி. சுகுணண் இவ்வாறு கருத்து தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரைக்கமைவாக உணவு கையிருப்பு பாதுகாப்பு மற்றும் போசாக்கினை உறுதிப்படுத்துவதற்கான கிராமிய பொருளாதார புத்துயிர் ஊட்டல் கேந்திர நிலையங்களை வலுவூட்டுவதற்கான பல்வகை துறைசார் ஒருங்கிணேந்த பொறிமுறை தொடர்பான மட்டு மாவட்ட மட்ட முதலாவது கூட்டம் மாவட்ட அரசாங்க

02

## நாளொன்றுக்கு, துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் 8.7 சதவீதமான சிறுவர்கள்

2011ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மோசமான பாலியல் துன்புறுத்தல்களுக்கு 30,896 சிறுவர்கள் உள்ளாகியுள்ளனர் என தெரிவித்த முன்னாள் சிரேஸ்ட பிரதிபொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடி, நாளொன்று 8.7 சதவீதமான சிறுவர்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர் என்றார். இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இன்று (29) "சிறுவர் வன்முறையை நிறுத்துங்கள்" என்ற தலைப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இலங்கைக்கு 1.5 மில்லியன் யூரோக்களை வழங்கும் ஐரோப்பிய ஒன்றியம்

இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக 1.5 மில்லியன் யூரோக்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டு மக்களைப் பாதிக்கும் சமூக பொருளாதார நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையில் இந்த உதவி வழங்கப்படவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிதியானது, உணவு, சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு உள்ளிட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காக வழங்கப்படவுள்ளது. இலங்கையில் மில்லியன் கணக்கான மக்களின் உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர்கள் சமூக பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகவும் ஐரோப்பிய ஒன்றிய நெருக்கடி முகாமைத்துவ ஆணையாளர் ஜனுஸ் லெனாச்சிக் (Janez Lenar) தெரிவித்துள்ளார். இந்த புதிய மனிதாபிமான நிதியுதவியின் மூலம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு ஆதரவை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் எதிர்ப்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மற்றுமொரு வரலாற்றுச் சாதனை



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் முதன் முறையாக முதிரா குழந்தை பராமரிப்பு பிரிவில் மற்றுமொரு வரலாற்றுச் சாதனை அண்மையில் நிகழ்த்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கடுக்காமுனை கிராமத்தை சேர்ந்த தம்பதிகளுக்கு கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் சாதாரண குறைப் பிரசவத்தில் (6 மாதம்) மிகவும் நிறை குறைந்த (500 கிராம் ) முதலாவது பெண் குழந்தை ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இக் குழந்தை கடந்த

02

## மார்ச் 26ஆம் திகதிக்கு பின்னர் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதிக்கு பின்னர் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற செயலமர்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தக் காட்டுச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்க மூவின மக்களும் ஒன்றுபட வேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன்

(சுமன்)

எமது தமிழ் சமூகத்திற்கு ஏற்படுகின்ற அநீதிகளுக்காக மாத்திரமன்றி தற்போது ஏனைய சமூகங்களுக்கும் ஏற்படுகின்ற அடக்குமுறைகளையும் கருத்திற்கொண்டே பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மூவின மக்களும் இந்தக் காட்டுச் சட்டத்தை, மனித நேயத்திற்கு எதிரான சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்க ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

02




## இலங்கைக்கு வழங்கப்படவுள்ள கடன் பணிப்பாளர் சபை எப்போது அங்கீகரிக்கும் என உறுதியாக கூற முடியாது

### IMFஇன் பிரதிநிதி

இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 2.9 பில்லியன் டொலர்களுக்கு அதன் பணிப்பாளர் சபை எப்போது அங்கீகாரம் வழங்கும் என உறுதியாக கூற முடியாது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. கடனாளர்களுடனான பேச்சுவார்த்தையின் வெற்றியைப் பொறுத்து காலம் தீர்மானிக்கப்படும் என அந்த நிதியத்தின் பிரதிநிதியொருவர் கூறியுள்ளார். எவ்வாறிருப்பினும் ஊழியர்கள் மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 2.9 பில்லியன் டொலர்களுக்கு இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கும் என இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்தார்

### மூத்த அரசியல்வாதி சுப்ரமணியன் சுவாமி



இந்திய பாரதீய ஜனதா கட்சியின் மூத்த அரசியல்வாதி சுப்ரமணியன் சுவாமி முன்னாள் ஜனாதிபதியையும், முன்னாள் பிரதமரையும் சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற நவராத்திரி விழாவில் பிரதம அதிதியாக சுப்பிரமணியன் சுவாமி கலந்துகொண்டுள்ளார் . இதன்போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவர் சந்தித்து கலந்துரையாடியதகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இன்று பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அவர் சந்திக்க உள்ளமை குறிப்பிடதக்கது.

### மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின்

84 நாட்களாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் முதிரா குழந்தை பராமரிப்பு பிரிவில் மிகுந்த கண்காணிப்பின் கீழ் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு 04.08.2022 அன்று 1.450 கிலோ கிராம் நிறையுடன் குழந்தையும் தாயும் ஆரோக்கியத்துடன் வீடு அனுப்பி வைக்கப்புட்டுள்ளார்கள். இத்தகைய சாதனையை புரிந்து வைத்தியசாலைக்கு பெருமை சேர்த்த முதிரா குழந்தை பராமரிப்பு பிரிவு வைத்தியநிபுணர், குழந்தைநல வைத்திய நிபுணர், நுண்ணுயிரியல் வைத்தியநிபுணர், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துக்கொள்கிறது.

### ஆபத்ததான கட்டத்தில் மட்டக்களப்பு

அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற போது மேற்சொன்னவாறு தெரிவித்தார். எமது திணைக்களத்தால் மாவட்ட ரீதியில் பின்தங்கிய பிரதேச பாடசாலை மாணவர்களின் போசாக்கு சம்மந்தமான பரிசோதனை மேற்கொண்ட போது 50ஃ மேற்பட்ட மாணவர்கள் போசாக்கற்ற நிலையில் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர். இது ஒரு ஆபத்தான நிலை. இதற்குரிய தீர்வு விரைவில் காணப்படாவிட்டால் இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைவதோடு நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து தொற்றா நோய்க்கு ஆளாகின்றனர். எனவே இதனை பாரிய தாக்கம் ஏற்பட முன் கட்டுப்படுத்த விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களின், வறுமைநிலையை போக்கி போசாக்கு தன்மையை உறுதிப்படுத்துவதற்கான பல செயற்றிட்டம் பிரதேச மட்ட குழுக்களை அமைப்பதன் மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தபடவுள்துடன் சமூர்த்தி திட்டம் ஊடாக சிறு தொழில் முயர்ச்சியிளர்குரிய கடன்உதவி வழங்க பிரதேச செயலாளர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த் , மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.எஸ்.புண்ணியமூர்த்தி பிரதேச செயலாளர்கள் மற்றும், மாவட்ட விவசாய நீர்ப்பாசன கடற்றொழில் கமநல திணைக்கள உயர், அதிகாரிகள் இராணுவ உயர்அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் கல்வி தீணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### இந்தக் காட்டுச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்க

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் நாடுபூராகவும் மேற்கொள்ளப்படுகின்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கெதிராகக் கையெழுத்துச் சேகரிக்கும்போராட்டம்மத்தியமுகாம்பிரதேசத்தில்முன்னெடுக்கப்பட்டபோதேஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையை அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவிலே மத்தியமுகாம் பிரதேசத்திலே ஆரம்பித்திருக்கின்றோம்.

இந்த நாட்டிலே மிகவும் மோசமானதொரு அடக்குமுறையைக் கையாள்வதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்த சட்டமானது. இந்த நாட்டில் பல உயிர்களைக் காவு கொள்வதற்கும் காரணமாயிருந்திருக்கின்றது. இந்தச் சட்டம் இன்னும் இந்த நாட்டுக்குத் தேவையா என்கின்ற பல கேள்விகளுக்கு மத்தியில் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் முகமாக நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று இச்சட்டத்திற்கெதிராக இதை இல்லாமல் செய்வதற்காக மக்கள் முன் சென்று கையெழுத்து போராட்டத்தினை ஆரம்பித்திருக்கின்றோம். குறிப்பாக இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாக அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் நாங்களாக இருக்கின்ற போதிலும் மத்தியமுகாம் உட்பட தமிழர் பிரதேசங்களிலே அதிகமான உயிர்களைக் காவு கொள்வதற்கும் இந்தச் சட்டமே காரணமாக அமைந்திருக்கின்றது. அந்த அடிப்படையில் இந்தச் சட்டத்தினுடாகக் குறிப்பாகத் தமிழர்கள் எமது உரிமை, இருப்பு உட்பட பலவற்றை இழந்தவர்களாவே இருக்கின்றார்கள். எமது சமூகத்திற்கு ஏற்படுத்தப்பட்ட, ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற அநீதிகளுக்கு மாத்திரமல்லாமல், தற்போது ஏனைய சமூகங்களுக்கும் இச்சட்டத்தின் மூலம் ஏற்படுகின்ற அடக்குமுறைகளும் இல்லாமல் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேயே நாங்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம். எனவே இந்த நாட்டில் வாழும் மூவின மக்களும் இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்ட காட்டுச் சட்டத்தை, மனித நேயத்திற்கு எதிரான சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்க ஒன்றுபட்டுச் செயற்படுவதோடு, இந்த நாட்டிலே அனைத்து இனங்களுமம சமஉரிமையுடன், சமாதானமாக, சமத்துவமாக வாழ அனைவரும் கரம்கோர்ப்போம் வாருங்கள் என்று தெரிவித்தார்.





# இலங்கை-பாகிஸ்தான் வர்த்தக சபையின் கூட்டத்தில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பங்கேற்பு




**(அஷ்ரப் ஏ சமத்)**

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் அனுசரணையில் செப்டம்பர் 27ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற இலங்கை–பாகிஸ்தான் வர்த்தக சபையின் 30ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஆலோசகருடன் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கலந்துகொண்டார். அதன்படி, சபை 2022ஃ23 காலத்திற்கான தலைவராக திரு. எஸ். தேவநாயகம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக தொடர்புகளை மேம்படுத்துவதில் இலங்கை–பாகிஸ்தான் வர்த்தக சபையின் தலைமை மற்றும் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதற்கும் வசதிகளை வழங்குவதற்கும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் எதிர்பார்த்துள்ளது. பாகிஸ்தானில் 33 மில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதித்த பேரழிவுகரமான வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட உயிர்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் குறித்தும் உயர்ஸ்தானிகர் பங்கேற்பாளர்களுக்கு விளக்கியதோடு இலங்கை மக்களினதும் அரசாங்கத்தினதும் ஆதரவு மற்றும் பிரார்த்தனைகளுக்கு தனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்தார். சம்பிரதாய நிகழ்வுகளை தொடர்ந்து, உயர் ஸ்தானிகர் மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டு ஆலோசகருடன் கவுன்சில் உறுப்பினர்களுக்கிடையிலான அமர்வு ஒன்றும் நடைபெற்றது.

## வைத்திய அதிகாரி ஜலீலா எழுதிய "சிறகு முளைத்த மீன்" கவிதை நூல் வெளியீட்டு விழா




**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகப் பணியாற்றும் ஹயாத்துமுஹம்மது ஜலீலா முஸம்மில் எழுதிய "சிறகு முளைத்த மீன்" கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை 01.10.2022 ஏறாவூர் வாவிக்கரை கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுத் தலைவி ஆசிரியை என்.எம். ஆரிபா தெரிவித்தார். வைத்தியர் ஜலீலா எழுதிய இந்த கவிதை நூல் தொகுப்பில் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, தாயிற் சிறந்த கேடயமில்லை, சேற்றில் நின்று சோற்றைத் தருகிறார் உள்ளிட்ட சுமார் 85 தலைப்புக்களில் கவிதைகள் புனையப்பட்டுள்ளன.

"சிறகு முளைத்த மீன்" கவிதை நூல் வெளியீட்டு விழாவில் இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இக்கவிதை நூலின் நூல் நயந்துரையை பல்துறைக் கலைஞரும் ஹாஷ்ய நாடக எழுத்தாளரும் நகைச்சுவை நடிகருமான கவிக்கோ ஏறாவூர் ஏ.சி. அப்துல் றஹ/மான் நிகழ்த்தவுள்ளார். அதிதிகள் உரை, ரசனைக் குறிப்பு என்பனவும் நிகழ்வில் இடம்பெறவுள்ளன. கவிதை நூலாசிரியர் வைத்தியர் ஜலீலா அலிகார் தேசியக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மறைந்த யூ. ஹயாத்து முஹம்மதுவின் மகளாவார். இவரது கவிதைகள், ஆக்கங்கள் இலங்கையின் தேசியப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

# மட்டு.ஏறாவூரில் கையெழுத்து போராட்டம்



**செங்கலடி நிருபர்**

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு போரி இலங்கை தமிழரசுக் கட்சியின் வலிபர் முன்னனி மற்றும் சர்வஜன நீதி அமைப்பும் இணைந்து முன்னெடுக்கும் கையெழுத்துப் போராட்டம் வியாழக்கிழமை (29) மட்டக்களப்பு ஏறாவூர் நகரில் நடைபெற்றது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா தலைமையில் நடைபெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், ஏறாவூர் நகரசபை தவிசாளர் எம்.எஸ்.நழீம் உட்பட மூவின மக்களும் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்கினர்.

## சம்மாந்துறையில் நாளந்தம் காட்டு யானைகளின் பொது மக்கள் அச்சத்தில்



**சம்மாந்துறை நிருபர் ஐ.எல்.எம் நாஸிம்**

அம்பாரை மாவட்டம், சம்மாந்துறை பிரதேசத்தில் நாளாந்தம் காட்டு யானைகளின் தொல்லைகள்காணப்படுகின்றன. இதனால், பொது மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளார்கள். இன்று(29)அதிகாலையும் சம்மாந்துறை நெற்புட்டிச் சந்திக்கு அருகாமையில் உள்ள அரிசி ஆலைகளைகாட்டு யானை ஒன்று சேதப்படுத்தியுள்ளது. மூன்று அரிசி ஆலைகளில் உள்ள மதில் சுவர்கள், நெல் களஞ்சிய அறைகள், முன் வாயிற் கதவு ஆகியவற்றைசேதப்படுத்தியுள்ளது. அத்தோடு அங்குள்ள நெல் மூடைகளையும் சேதப்படுத்தியுள்ளன.

மேலும் பயன்தரும் வாழை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளது. சம்மாந்துறை பிரதேசத்திற்குள் நாளாந்தம் காட்டு யானைகள் இரவு வேளைகளில் நுளைந்து சேதங்களைஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதனால், மக்கள் அச்சமடைந்தவர்களாக உள்ளனர். அதனால், காட்டுயானைகளின் வருகையை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றுபொது மக்கள் கேட்டுக் கொள்கிறார்கள். இதே வேளை, இன்று காலை 09.30 மணியளவில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபாதலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் கேட்போர் மண்டபத்தில் யானை மற்றும் மனித மோதலைகுறைப்பது தொடர்பான வழிகாட்டல் கூட்டமொன்று இடம் பெற்றது. இதில் விவசாயிகள், பொது மக்கள், கிராம சேவகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில்சம்மாந்துறை பிரதேச வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரி ரீ.ஜெயதீஸனும் கலந்து கொண்டு கருத்துக்களைமுன் வைத்தமை குறிப்பிடத்தக்கது.



# இருதய நோய் பாதிப்புக்களினால் 34சதவீதமானவர்கள் இறப்பு

## குச்செவெளி தவிசாளர் ஏ.முபாறக் தெரிவிப்பு



**பைஷல் இஸ்மாயில் –**

உலகம் முழுவதிலும் 17.3 மில்லியன் மக்கள் பக்கவாதம் மற்றும் இருதய நோயினால் இறப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றது. இதிலிருந்து நாம் பாதுகாப்பு பெறுவதாக இருந்தால் 30 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலரும் ஆண்டுக்கொருமுறை இதயம் சார்ந்த பரிசோதனைகளை செய்துகொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்துவதற்காகவே உலக இதய தினம் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருவதாக குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

உலக இதய இத்தினத்தை சிறப்பிக்கும் வகையில் இன்று (29) குச்சவெளி பிரதேச சபையில் இடம்பெற்ற இலவச இரத்ததான குழுவினரை சபை உத்தியோகத்தர்களுக்குள் நியமிக்கும் நிகழ்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் இடம்பெறும் உயிரிழப்புககளில் 34 சதவீதமானவை இருதய பாதிப்புக்களினால் இடம்பெறுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் தொற்றாநோய்ப் பிரிவு, இருதய விசேட வைத்திய நிபுணர்களின் நிறுவன அமைப்புடன் இணைந்து வருடந்தோரும் உலக இருதய தினத்தை கொண்டாடி வருகிற அதேவேளை, இதய நோயிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு திட்ட வரைபுகளை எமது அரசு சுகாதாரத்துறையுடன் இணைந்து அதற்கான முன்னெடுப்புக்களையும் முன்னெடுத்து வருகின்றது. வளர்ச்சியடைந்துள்ளதொழில்நுட்பத்திற்குமத்தியில் எமது நாடு எதிர்நோக்கியுள்ள கொவிட் தொற்றுக்கு மத்தியில் இருத நோய் மற்றும் தொற்றாநோய் போன்ற பல்வேறுபட்ட விழிப்புணர்வுகளை சுகாதார அமைச்சு மற்றும் அது தொடர்புபட்ட நிறுவனங்களும் மேற்கொண்டுவருவதுடன் அதற்காக பல மில்லியன் ரூபாய்களை செலவும் செய்து வருகின்றது என்றும் தவிசாளர் முபாறக் சுட்டிக்காட்டினார்

உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் குழந்தைகளில் 10 இலட்சம் குழந்தைகள் பிறவியிலேயே இதயக் கோளாறுடன் பிறக்கின்றன. இதயக் கோளாறு என்பது பெரும்பாலும் ஆண்களையும், வயதானவர்களையும் மட்டுமே தாக்கும் என்ற கருத்து பரவலாக உள்ளது. அது தவறாகும். இதயத்தில் ஏற்படும் நோய்கள் குறித்தும், அதில் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்க்க, ஆரோக்கியமான உணவு மற்றும் உடற்பயிற்சி செய்வது போன்ற விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று உலகம் முழுவதும் நடைபெறுகின்றது என்றார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் உணவு கையிருப்பு மற்றும் போசாக்கு பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்கான ஆரம்ப கலந்துரையாடல்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் உணவு கையிருப்பு மற்றும்போசாக்குபாதுகாப்புவேலைத்திட்டத்திற்கான ஆரம்ப கலந்துரையாடல் நேற்று (28) மாலை 3.00 மணிக்கு செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாவட்ட அரசாங் அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. உணவு கையிருப்பு பாதுகாப்பு மற்றும் போசாக்கினை உறுதிப்படுத்தல் பொருளாதாரப் புத்துயிர் கேந்திரநிலையங்களை வலுவூட்டல் தொடர்பாக சனாதிபதியின் மற்றும் பிரதம மந்திரி அமைச்சரவை தீர்மானங்களுக்கு அமைவாக மாவட்ட மாகாண பிரதேச கிராம மட்டங்களில் ஸ்தாபிப்பது தொடர்பான துறைசார் ஒருங்கிணைந்த பொறிமுறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கு எந்தவெரு சந்தர்ப்பத்திலும் போசாக்கின்மை உணவு பற்றாக்குறை எற்படுவதற்கு வாய்பளிக்க கூடாது என்பதில் சகலதரப்பினரும் கவனம் செலத்தப்படுதல் வேண்டும்.

இவ்வகையான செயல்திட்டத்தின் ஊடாக நாட்டின் உணவுபஞ்சம்போசாக்கின்மைஎற்படாதவகையில் நாட்டை முன்னெடுத்து செல்வதற்கு இக்குழுவினர் சிறப்பான முறையில் செயல்பட்டு நாட்டின் ஸ்திரனமான நிலைக்கு அயராது பாடுபடவேண்டும் என அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் சுதர்ஷினி ஸ்ரீகாந், திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி மற்றும் பிரதேச செயலாளர்கள், வலையக்கல்வி பணிப்பாளர்கள், சுகாதாரப்பணிப்பாளர்கள், கால் நடை வைத்தியர்கள், தனியார் நிறுவன பிரதி நிதிகள், கமநல சேவைகள் பிரதி ஆணையாளர், நீர்பாசனம், சமுர்த்தி பணிப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கினால் மாத்திரமே நாட்டில் மனித உரிமை பாதுகாக்கப்படும்

## கையெழுத்து வேட்டை நிகழ்வில் முன்னாள் எம்பி கோடீஸ்வரன்




**( வி.ரி. சகாதேவராஜா)**

இலங்கையில் இன்று மூவின மக்களுக்கும் எதிராக பாய்ந்திருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கினால் மாத்திரமே இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும். இவ்வாறு அம்பாறை மத்திய முகாமில் நடைபெற்ற பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து வேட்டையில் கலந்து கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இந்த பயங்கரவாத தடைச் சட்டம் அன்று தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக இலங்கை அரசினால் அராஜகமாக கொண்டுவரப்பட்டது. இன்று அதே சட்டம் ஏனைய முஸ்லிம் சிங்கள மக்கள் மீதும் பாய்கின்றது. இந்த சட்டத்தினால் மனித உரிமை மீறப்பட்டிருக்கின்றது இனப்படுகொலை இடம்பெற்றிருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவேதான் இப்படிப்பட்ட கொடுமையான சட்டத்தை நீக்கும்படி கோரி இந்த கையெழுத்து வேட்டையை நாம் ஆரம்பித்து இருக்கின்றோம். இந்த பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கினால் மாத்திரமே இலங்கையில் மனித உரிமை பாதுகாக்கப்படும் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த வேட்டையில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

# 26வது பொதுப் பட்டமளிப்பு விழா




**செங்கலடி நிருபர்**

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 26வது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் சனி (01) மற்றும் ஞாயிற்றுக் (02) கிழமைகளில் வந்தாறுமூலை வளாக நல்லையா மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவித்தார். கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு வியாழக்கிழமை (29) கிழக்குப் பல்கலைக் கழக பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதி உபவேந்தர் பேராசிரியர் கலிஸ்ரஸ் எலியாஸ் கருணாகரன், பொதுப் பட்டமளிப்பு விழா தவிசாளர் பேராசிரியர் மகேஸ்வரன் சிதம்பரேசன், பதிவாளர் அமரசிங்கம் பகீரதன், பிரதிப் பதிவாளர் திருமதி நிசாந்தினி நிருமிதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர் தொடரந்து கருத்து தெரிவிக்கையில் – கிழக்குப் பல்கலைக் கழகம் ஆரம்பித்து 42வது ஆண்டினை நினைவுகூரும் முகமாக எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஏழாம் திகதிவரை பல்கலைக் கழக வாரமாக பிரகடணப்படுத்தப்பட்டுள்ளது. இதில் மூலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் 26வது பொதுப்பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. உள்வாரி மற்றும் வெளிவாரியாக 2506 மாணவர்களுக்கு பட்டம் பெறவுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் மாநாகப்போடி செல்வராஜா தலைமையிவ் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் வாக்லே, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் கல்லைக்கழக துணைவேுந்தர் பேராசிரியர் முனைவர் ந.பஞ்சநதம் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

கலாநிதி, முதுதத்துவமாணி, விவசாய விஞ்ஞான முதுமாணி, முதுகலைமாணி, முதுகல்விமாணி, வணிக நிர்வாகத்தில் முதுமாணி, அபிருத்திப் பொருளியல் முதுமாணி, முகாமைத்துவ பட்டப்படிப்பின் டிப்ளோமா, இளமாணி உட்பட 1247 பேருக்கு பட்டங்கள் முதலாம் நாளில் வழங்கப்படவுள்ளன. இரண்டாம் நாளில் 1259 பேர் பட்டம் பெறவுள்ளனர் கிழக்குப் பல்கலைக் கழக வரலாற்றில் முதல்தடவையாக தொழில்நுட்ப பீட மாணவர்களுக்கான விவசாய தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மையில் உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் இளமாணி பட்டம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத தடைச் சட்டம் ஈழத்தமிழரின் வாழ்வியலை சீரழித்தது

## மத்திய முகாமில் தவிசாளர் ஜெயசிறில் சீற்றம்



**( வி.ரி. சகாதேவராஜா)**

இலங்கையில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வியலை முற்றாக சீரழித்தது. இலட்சக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறையில் வாட காரணமாக இருந்தது. இன்று அச்சட்டம் மூவின மக்கள் மீதும் பாய்ந்திருப்பது விசித்திரமானது அல்ல. இவ்வாறு அம்பாறை மத்திய முகாம் பகுதியில் தமிழரசு கட்சியால் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்து வேட்டை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் சீற்றத்துடன் கூறினார்.

தமிழரசுக் கட்சியின் ஊடக பேச்சாளர் எம் ஏ சுமந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலும் அவர் கூறுகையில். தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலிக்கின்ற தமிழரசுக் கட்சியானது 25 மாவட்டங்களிலும் இந்த கையெழுத்து வேட்டையை நடத்தி வருகின்றது. 1979 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தச் சட்டத்தினால் தமிழ் இளைஞர்கள் தமிழினம் பல்வேறு அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்தது. இதனால் வடகிழக்கு தாயக மண்ணிலே எமது தமிழ் மக்கள் சொல்லொணா துயரத்தில் தள்ளப்பட்டார்கள்.வாழ்வியல் சின்னாபின்னமாகியது. அன்று தமிழ் மக்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட இந்த பயங்கரவாததடை சட்டம் இன்று முஸ்லிம் இளைஞர்கள் நாட்டில் இருந்த அராஜக அரசியலை விரட்டி அடித்த அறகல போராட்டக்காரர்கள் மீதும் பாய்ந்து இருக்கின்றது.

அதற்காகத்தான் மூவின மக்களும் சேர்ந்து இப் பொல்லாத சட்டத்தை நீக்கும்படி கோரி இந்த கையெழுத்து வேட்டையை நாடுபூராக நடாத்தி வருகின்றோம். தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏனைய மக்களை வேதனைப்படுத்தி தமிழ் மக்களுக்கு சுதந்திரம் வேண்டும்என்று ஒருபோதும் கேட்கவில்லை . ஏனைய மக்கள் அனுபவிக்கின்ற உரிமை சுதந்திரம் போன்றவற்றை எமது தமிழ் மக்களுக்கும் தாருங்கள் என்றுதான் கேட்கின்றோம். இல்லாததை கேட்கவில்லை. நாம் எமது உரிமைகளைத்தான் கேட்கின்றோம்.

நாம் எந்த இனத்திற்கும் எதிரானவர்கள் அல்ல. எமது பயணம் தேச விடுதலைக்காகவும் மக்களுக்காகவும் தொடர்ச்சியாக நடைபெறும்.

# சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் தாய்மார்களுக்கான பாலுட்டும் அறை திறந்து வைப்பு



**சம்மாந்துறை நிருபர்**
**ஐ.எல்.எம் நாஸிம்**

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் **Diamond rainwear (pvt) Ltd** நிறுவனத்தின் அனுசரனையுடன் தாய்மார்களுக்கான பாலுட்டும் அறைதிறந்து வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ்.எல். முகம்மது ஹனீபா அவர்களின் தலைமையில் நேற்று (28) சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் அவர்கள் கலந்து கொண்டதோடு கௌரவ அதிதியாக **Diamond rainwear (pvt) Ltd** நிறுவனத்தின் செயலாளர் எஸ்.எம் நபீர் அவர்களும்

அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் யு.எம். அஸ்லம், கணக்காளர் ஐ.எம் பாரிஸ், சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் யு.எல்.என் சலீம் ,சமூகசேவை உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை பிரிவின் ஏனைய உத்தியோகத்தகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# குச்சவெளி பிரதேசத்தில் இடம்பெற்ற கிராமிய கைத்தொழில் சந்தை மற்றும் கண்காட்சி

**எப்.முபாரக்**

குச்சவெளி பிரதேசத்தில் இடம்பெற்ற கிராமிய கைத்தொழில் சந்தை மற்றும் கண்காட்சியும் நடைபெற்றது. தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கிராமிய சிறு கைத்தொழில்களை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் ஒருபகுதியாக குச்சவெளி பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமியக் கைத்தொழில் பொருட்களின் சந்தை மற்றும் பொருள் கண்காட்சி குச்சவெளி பிரதேச செயலாளர் திரு. கே.குணநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உள்ளூர் கைத்தொழில் உற்பத்தியாளர்களின் சந்தையுடனான கண்காட்சிக் கூடத்தை திறந்து வைத்ததுடன் குச்சவெளி தவிசாளர் உரையாற்றுகையில்: நவீன உற்பத்திகளால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு செயற்கைச் சூழலுக்குள் நாம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதால், பாரம்பரிய உற்பத்திகள் மங்கி மறைந்து வருகின்றன அத்துடன் நவீன அவசர உற்பத்திகளின் ஆக்கிரமிப்பின் விளைவாக உள்ளூர் கிராம உற்பத்திகளுக்கு தேசிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பது ஒரு சவாலாக உருவெடுத்துள்ளது. தற்போதைய நவீன அவசர உலகில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் இயற்கைக்குச் சவால் விடும்படியாகவும், சூழலுக்கும் ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிப்பதாகவும் அமைந்திருக்கின்ற போதும் நம்மில் அநேகமானோர் அவசர உலகப் போக்கில் அதனையே விரும்புகின்றோம்.

நீண்டகாலப் போக்கில் இந்த நவீன உற்பத்திகளால்இயற்கைக்கும்தேகஆரோக்கியத்திற்கும் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை உணர்ந்த ஒரு சாரார் பாராம்பரியக் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இன்று சிறு கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் நோக்கிலும், பாரம்பரிய உணவு உற்பத்தியாளர்களின் உணவு உற்பத்திகளை ஊக்குவிக்க அரசும் இன்னும் சில அரச சார்பற்ற சமூக அமைப்புக்களும் உதவிக் கொண்டிருக்கின்றன. இந்த சிறந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நவீன மாயத்திலிருந்து விடுபட்டு எமது பரம்பரியத்திற்குள் மீண்டும் நாம் உள்நுழைவதன் மூலம் நாமும் எமது எதிர்கால சந்ததியும் நீடித்து நிலைக்கக் கூடியதான இயற்கைக்கும், கேடு விளைவிக்காத சிறந்த சூழலுக்கும் மாறிவிட பெரும் வாய்ப்பாகும்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சியாளர்களான பெண்களுடைய திறமைகளை வெளிப்படுத்துகின்ற ஒரு நிகழ்வாகக் கூட இதனைப் பார்க்கும்போது இதற்கென ஒரு தேசிய சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்புகின்றேன். அதன் மூலமாக கை வினைத்திறனில் ஈடுபட்டுள்ள இந்தக் குடும்பங்கள் தங்களது வாழ்வாதாரத்திலே ஒரு சிறந்த நிலைக்குச் செல்ல முடியும். இதனூடாக தமது உற்பத்திகளை அவர்கள் தேசிய மட்டத்திற்கு எடுத்துச் சென்று பிரபல்யப்படுத்த வாய்ப்பும் ஏற்படும் என்றார் தவிசாளர்.

இக்கண்காட்சியில்பாரம்பரியஉணவுவகைகள், நஞ்சற்ற மரக்கறி மற்றும் தானியங்கள், சிற்றுண்டி மற்றும் முறுக்கு வகைகள், உணவு வகைகள், ஆடைகள், பைகள், மட்பாண்டங்கள், பனையோலை உற்பத்திப் பொருட்கள், பன்பாய்கள், வீட்டு அலங்காரங்கள், தாவர உற்பத்திகள் மற்றும் இன்னோரன்ன பாரம்பரிய உற்பத்திகள் இடம்பிடித்திருந்ததுடன் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபை செயலாளர் திருமதி.மாலினி அசோக்குமார், குச்சவெளி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் திருமதி. பாமா மோகன முரளி அத்துடன் குச்சவெளி பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், குச்சவெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் இன்னும் கிராமியக் கைத்தொழில் உற்பத்தியாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

**நூறுல் /ஹுதா உமர்**



இறக்காமம் பிரதேச சிறுவர்களின் உரிமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, சிறுவர் நலன் மற்றும் மேம்பாடு என்பவற்றை ஆராய்கின்ற பிரதேச சிறுவர் உரிமை கண்காணிப்புக் குழுக் கூட்டம் (DCMC) சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ். சபறுல் ஹஸீனாவின் ஒருங்கிணைப்பில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச சிறுவர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில், பாடசாலை இடை விலகள், கல்வி ரீதியான பிரச்சினைகள், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு, பிரத்தியேக கல்வி நடவடிக்கைகள், சிறுவர்களை மையப்படுத்திய போதைப் பாவனை, இளவயது திருமணம், சிறுவர்களின் சுகாதார மேம்பாடு, விஷேட தேவையுடைய சிறுவர்களின் நலனோம்பல் மற்றும் கிராம மட்ட சிறுவர் அபிவிருத்தி குழு (VCDC) மற்றும் முன்பள்ளிகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

# அறுபதாவது அகவையை எட்டும் திருகோணமலை கல்வி வலய விஞ்ஞான உதவி கல்விப்பணிப்பாளர்



உயரத்தாலும் உள்ளத்தாலும் உயர்ந்த நிலையில் உள்ள நிரந்தரமாக முகத்தில் உறைந்து கிடக்கும் புன்சிரிப்புடன் கூடிய எல்லோராலும் 'சுதா சேர்' என அன்புடன் அழைக்கப்படும் .சுதாகர் அவர்கள் திருகோணமலை வலயத்தின் விஞ்ஞான பிரிவுக்குக்கு கிடைத்த அரிய பொக்கிஷமாகும்.

இவர் பாடசாலை மேற்பார்வைக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் கூடுதலான நேரங்களை மாணவர்களுடன் செலவிடவே விரும்புவார். மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை அவதானிப்பதன் மூலமே ஓர் ஆசிரியரை மதிப்பீடு செய்ய விரும்புவார் ஆசிரியர்களின் திறமைகளை பாராட்டி உற்சாகப்படுத்துவதோடு அவர்களின் கற்பித்தலில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை எடுத்துக் கூறும் பாங்கு அவருக்கே தனித்துவமானது.

விஞ்ஞான பீடத்திலும் பௌதீகவியல் பாடத்திலும் சந்தேகங்கள் கேட்கும் சந்தர்ப்பங்களில் உடனடியாகவே பூரணமாக தெளிவான விளக்கத்தை கொடுக்கக் கூடிய அளவிற்கு பாடப்பரப்புகளில் ஆழ்ந்த அறிவுடையவர். இடைநிலை மற்றும் உயர் தர விஞ்ஞான பிரிவுகளில் நடைபெறும் விஞ்ஞான வினாடி வினா பொது அறிவுப் போட்டிகளில் சகல மாணவர்களும் பங்கு பற்றி அறிவை வளர்க்க வேண்டும் என்பதில் நீண்ட காலமாக நடுநிலையாக தரமாக நடத்தியதன் காரணமாக க.பொ.த (சாதரன) (உயர்தர) பொதுப் பரீட்சைகளில் மாணவர் பெறுபேறு வளர்ச்சி அடைந்ததை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. செய்முறை விஞ்ஞானக் கல்வி மூலம் விஞ்ஞானத்தில் மாணவர்களின் ஆர்வம் தூண்டப்படும் என்பதற்காக செய்முறை பரீட்சைகள் ஆய்வுகூடப் போட்டிகள் என்பவற்றை அறிமுகப்படுத்தினார்

கல்வித்தரவட்டத்தை உருவாக்கி சிறப்பாக தொடர்ச்சியாக நடத்துவதன் மூலம் ஆசிரியர்கள் தங்களிற்கிடையே கருத்துக்களை பரிமாற்றம் செய்வதன் மூலமும் தரமான விளக்கத்தை தயாரிப்பதன் மூலமும் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு வழிவகுத்தார். ஓய்வு பெற்ற ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வையும் வருடாவருடம் நடாத்த கல்வித் தரவட்டம் தவறுவதில்லை.

வலய மட்டத்தில் க.பொ.த (உயர்தர) விஞ்ஞான பிரிவு மாணவர்களின் அடைவு மட்டத்தை தொகுத்து அவர்களின் நிலையை வெளிப்படுத்தியதன் மூலம் மாணவர்களின் கல்வி மீதான நாட்டத்தை அதிகரிக்கச் செய்த பெருமையும் அவர்களையே சாரும். உலகெங்கும் பரந்துபட்டு வாழும் இவரது மாணவர்கள் மூலம் இவரது அர்ப்பணிப்பான சேவையை அறிந்து கொள்ள முடியும்.

# காணிக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கி வைப்பு

**ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்டம்,தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் பல வருட காலமாக குடியிருப்பு காணிக்கான அனுமதிப்பத்திரமின்றி வாழ்ந்து வந்த நிலையில் அதனை பெற விண்ணப்பித்தோர்களுக்கான காணி பத்திரங்கள் (28) மாலை பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற இவ் அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் 74 அனுமதிப் பத்திரங்களும், 30 உறுதிப் பத்திரங்களும் இதன் போது வழங்கப்பட்டன.மக்களுக்கான தேவையறிந்து காணி பத்திரங்களுக்காக விண்ணப்பித்தவர்ளுக்கு காணி கிளை மூலமான இச் சேவை துரிதமாக இடம் பெற்று வருகின்றது. இதில் மாகாண காணி ஆணையாளர் டி.எம். ஆர்.சி.தசநாயக்க, மாகாண காணி உதவி ஆணையாளர் ஜீ.ரவிராஜன், உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர, பிரதம முகாமைத்துவ உதவியாளர் மஹிந்த வனசிங்க உட்பட காணிக் கிளை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.




# நிந்தவூர் கடலரிப்பு விவகாரம் - கரையோர பாதுகாப்பு திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கள விஜயம்





**நூருள் /ஹுதா உமர்**

நிந்தவூர் பிரதேச சபை உப தவிசாளர் வை எல் சுலைமாலெப்பையின் அழைப்பினையேற்று, கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆர்.ஏ.எஸ். ரணவக்க, (28) நிந்தவூர் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார் நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக நிலவி வரும் தொடர் கடலரிப்பின் மூலமாக ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் பார்வையிட்ட அவர் எதிர்காலத்தில் கடலரிப்பினைத் தடுப்பதற்கான தடுப்புச் சுவரினை அமைக்கும் நிரந்தர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதிபடத் தெரிவித்தார். இலங்கையில் எந்த ஊரிலும் ஏற்படாத கடலரிப்பினை, நிந்தவூரில் தான் கண்டுகொண்டுள்ளதாக தெரிவித்த அவர், நிரந்தர தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் விரைவில் செய்து நிந்தவூர் பிரதேசத்தில் கடல் அரிப்பினை தடுப்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர், உப தவிசாளர் வை எல் சுலைமாலெப்பை, பிரதேச சபை உறுப்பினர்களான எம் எம் எம் . அன்சார், சட்டத்தரணி ரியாஸ் ஆதம், ஏ.அஸ்வர், கே.எம். ஜாரிஸ், எம் மஜீத், ஏ எம் வாஹிட் மற்றும் மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களுக்கான கலையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் எம். துளசிதாசன், நிந்தவூர் எமரெல்ட் விளையாட்டு கழகத்தின் தலைவரும், சமூகவியலாளருமான எம் சி எம். றிபாய் மற்றும் மீனவர்களான மஜீத், நிசார் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து நிந்தவூர் பிரதேச சபையின் உப தவிசாளர் வை எல் சுலைமாலெப்பை கருத்து தெரிவிக்கையில், நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பினைத் தடுப்பதற்கான இறுதி கட்ட நடவடிக்கைகள் யாவும் வெற்றி அடைந்துள்ளது. நல்லது நடக்க இறைவனை பிரார்த்திப்போம். எனக் குறிப்பிட்டுள்ளார்

# தமிழர் மரபில் நடிகர் திலகம் சிவாஜி கனேசன்



**(அ . அச்சுதன்)**

சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தின்ழ ஏற்பாட்டில் ழபேராசிரியர் பாலசுகுமாரின்ழ ஒன்பது நூல்கள் அறிமுகமும் வெளியீட்டு நிகழ்வும் 25.09.2022. ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் இடம் பெற்றது. தமிழ் மரபில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்பு பண்பாடு எனும் நூல் தொடர்பான அறிமுக உரையை எழுத்தாளர் என்.ரகுராம் வழங்கினார் அவர் உரையாற்றும் போது, இரு சிகரங்களை தொட்டு நிற்கும் தருணம் இது.. தமிழர் மரபில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஒருவராகவும் நம் நாட்டில் அரங்காற்றுகை... தமிழர் கலை கலாச்சார முதன்மையாளராக நம்மோடு வாழும் நூலாசிரியர் பேராசிரியர் பால சுகுமார் மற்றவராகவும் இணைந்திடும் நாம் இணைத்திடும் நேரம் இது .

54 பக்கங்களோடு ஒரு காத்திரமான கைக்கு அடக்கமான நூல் இது. தமிழரின் எழுச்சியோடும் பண்பாட்டோடும் நிரந்தரமாகிவிட்ட சிவப்பு மஞ்சள் நிறங்களில் ஒளிரும் பின் புலத்தில்.. கலை உலகை வென்ற பூரிப்போடும் மங்கள மலர்வோடும் தமிழர் பண்பாட்டு உடையிலேயே ஒய்யாரமாய் வீற்றிருக்கும் நடிப்புச் சக்கரவர்த்தி சிவாஜி கணேசனின் வரவேற்புடனான அட்டைப்பட அழகு மிக வசீகரமாகவே நம்மை வரவேற்கின்றது. தமிழ்நாடு சென்னை மாநகர உயிர்மெய் பதிப்பக வெளியிடாக டிசம்பர் 2019 இல் அச்சிடப்பட்ட நூல் இப்போது நம் கைகளில்.

உள்ளே நூலாசிரியர் பேராசிரியர் பாலசுகுமார் பற்றிய ஓர் அடக்கமான அறிமுகத்துடனும்.... ஆசிரியர் அவர்களின் பிற நூல்களின் விவரத்துடனும் தொடர்கின்றது... இங்கு வழமைக்கு மாறாக முன்னுரையாக பிரசுரம் ஆகியிருப்பது நடிகர் திலகத்தின் மறைவையொட்டி (21.07.2001) அவருக்கான பிரியாவிடை கூறலாக பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி எழுதிய ஒரு பண்பாட்டு ஆய்வியல் குறிப்பு அமைந்துள்ளது.

தொடர்ந்து நூலாசிரியர் தன் உள்ளக் கிடக்கையை வடித்துள்ளார். அதுவும் தனது நீண்ட கால கனவு ஒன்று என்று மெய்ப்பட்டு இருப்பதாக இந்நூல் தொடர்பாக இங்கே ஞாபகப்படுத்துகின்றார். நூலின் இதழ்களாக நூலாசிரியரால் ஐந்து கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளது.

01. நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் நடிப்பு கோட்பாடுகளும்
02.நானும் நடிகர் திலகமும்
03.கற்பனைக்கு மிஞ்சிய நடிப்பு.
04.தமிழின் அடையாளமாக நடிகர் திலகம்
5. மரபிலிருந்து நவீனத்துக்கு என்ற கட்டுரைகளை இங்கே தொகுத்துள்ளார்.

இங்கு நூலாசிரியர் கால தேவைகளுக்கு ஏற்ப அவ்வப்போது எழுதப்பட்ட கட்டுரைகளாக இவை பிரசுரமாகி உள்ளன. மேடை.. , நடிப்பு..., சினிமா... என்று வெறுமனே பொழுதுபோக்கு காரணிகளாக பொதுவாக பார்க்கப்படும் அன்றாட நிகழ்வுகளில்.... நூலாசிரியர் தன் சுய விருப்பு.. வளர்ந்த சூழல்.. தன் கலைத்துறை சார்ந்த ஈடுபாடு.... தன் துறை சார் தேடல்கள்... மற்றும் அவை பற்றிய ஆய்வுகளின் அடிப்படையில், ஒரு உன்னத நடிகரை அதுவும் எம் தமிழ் மரபில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்பு, பண்பாடு பற்றி மிக மிக துணிகரமாக... மிக மிக ஆழமாக.. மிக மிக தெளிவாக..... மிக மிக நுணுக்கமாக... ஆராய்ந்து தெளிவுற்று நிறுவுகின்ற இக்கட்டுரைகளின் ஊடாக குறிப்பாக நடிப்புக் கோட்பாடுகள்... நடிப்பு முறைமைகள்... தமிழர் நடிப்பு பண்பாடு, மரபு... கலாச்சாரம்....அதன் செழுமை பற்றி ஆராய்கையில் சிலப்பதிகாரம், தொல்காப்பியம் போன்றவற்றோடு இணைந்ததாக நடிப்பு மெய்பாட்டியல்... நடிப்பு சார்பான எட்டு அகவைகள் அவற்றின் முப்பத்தியிரண்டு பிரிவுகள்... தொடர்பாக நடிகர் திலகத்தின் திரைப்பட உதாரணங்களோடு நமக்கு கற்றுத் தருகின்றார் நூலாசிரியர் என்றார்.




# சமூக பாதுகாப்பு சபையில் இணைந்த மாணவர்களுக்கு தலா 5000 ரூபா நிதி

**( வாஸ் கூஞ்ஞ)**

சமூக பாதுகாப்பு சபையின் குழந்தைகளுக்கான திட்டத்தில் இணைந்த கடந்த வருடம் (2021) ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் ஐந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு மாணவருக்கும் தலா 5000 ரூபா கொடுப்பனவு மன்னார் மாவட்ட செயலகத்தில் வைத்து அரசாங்க அதிபர் திருமதி.ஸ்டான்லி டீமெல் அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் சமூக பாதுகாப்பு சபையின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# நானாட்டான் பிரதேச சபையின் மேல்மாடி அலுவலகக் கட்டிடம் திறப்பு விழா



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டம் நானாட்டன் பிரதேச சபையின் மேல்மாடி அலுவலகக் கட்டிடம் புதன்கிழமை (28) காலை உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஸ்ரீவர்ணன் நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் .பரஞ்சோதி உப தவிசாளர் லூர்துநாயகம் புவனம் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் இணைந்து அலுவலகக் கட்டிடத்தை திறந்து வைத்தார்கள் மேலும் இந்த நிகழ்வில் மதத்தலைவர்கள் நானாட்டான் பிரதேச சபையின் உறுப்பினர்கள் மன்னார் மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் செயலாளர்கள் நானாட்டான் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்

# நோட்டிங்ஹாம் செல்லும் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவி

**நூறுல் /ஹுதா உமர்.**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாச்சார பீடத்தின் ஆங்கில மொழித்துறையில் கல்வி கற்று, முதற்தரத்தில் சித்தியடைந்த அப்துல் சலீம் சைசூன் என்ற மாணவி, பொதுநலவாய நாடுகளுக்கான உதவுதொகை பெற்று பிரித்தானியாவில் உள்ள நோட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின் படிப்பைத் தொடர்வதற்காக செல்கிறார். குறித்த மாணவியை வாழ்த்துவதுடன் அவளூடாக மற்ற மாணவர்களுக்கு ஊக்கமூட்டும் உரை ஒன்றை நிகழ்த்த வைத்த நிகழ்வு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாச்சார பீடத்தின் ஆங்கில மொழித்துறைப் பிரிவின் கேட்போர் கூடத்தில் ஆங்கில மொழித்துறைத் தலைவர் கலாநிதி ஏ.எம்.எம்.நவாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு அப்துல் சலீம் சைசூன் தனது கணவருடன் வருகைதந்திருந்தார். நிகழ்வின் ஏற்பாட்டாளரும் தலைவருமான கலாநிதி ஏ.எம்.எம்.நவாஸ், தனது உரையின்போது குறித்த மாணவி தொடர்பான தனது புரிதல்களை இங்கு எடுத்துரைத்தார். இதன்போது சிரேஷ்ட விரிவுரையாளர்களான எம்.ஐ.எகப். கரீமா மற்றும் எம்.எம்.அப்துல் றஹ்மான் ஆகியோரும் மாணவி தொடர்பான தங்களது கருத்துக்களை முன்வைத்தனர். பின்னர் அப்துல் சலீம் சைசூன், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் உரை ஒன்றை நிகழ்த்தினார். மாணவி சைசூன் பட்டப் பின் படிப்பைத் தொடர்வதற்காக செல்லவுள்ள பிரித்தானியாவின் நோட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்திலேயே கலாநிதி ஏ.எம்.எம்.நவாஸ் கலாநிதிப் பட்டத்தைப் பெறுவதற்கான கல்வியைத் கற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இறுதியாக குறித்த மாணவி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# காணிக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கி வைப்பு



**ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்டம்,தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் பல வருட காலமாக குடியிருப்பு காணிக்கான அனுமதிப்பத்திரமின்றி வாழ்ந்து வந்த நிலையில் அதனை பெற விண்ணப்பித்தோர்களுக்கான காணி பத்திரங்கள் நேற்று (28) மாலை பிரதேச செயலக மண்டபத்தில்வைத்து வழங்கிவைக்கப்பட்டன.தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற இவ் அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் 74 அனுமதிப் பத்திரங்களும், 30 உறுதிப் பத்திரங்களும் இதன் போது வழங்கப்பட்டன.மக்களுக்கான தேவையறிந்து காணி பத்திரங்களுக்காக விண்ணப்பித்தவர்ளுக்கு காணி கிளை மூலமான இச் சேவை துரிதமாக இடம் பெற்று வருகின்றது.

இதில் மாகாண காணி ஆணையாளர் டி.எம்.ஆர். சி.தசநாயக்க, மாகாண காணி உதவி ஆணையாளர் ஜீ.ரவிராஜன், உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர, பிரதம முகாமைத்துவ உதவியாளர் மஹிந்த வனசிங்க உட்பட காணிக் கிளை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# 47 ஆவது மாகாண மட்ட விளையாட்டில் போட்டியில் வெற்றிகளை தனதாக்கிய தம்பலகாம் பிரதேச செயலக கழக அணி



**ஹஸ்பர்**

கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில்47ஆவது மாகாண மட்ட விளையாட்டு விழாவில் தம்பலகாமம் பிரதேச செயலக கழகம் சார்பாக பங்குபற்றிய வீரர்கள் 3தங்கப் பதக்கங்கள்,3 வெள்ளிப் பதக்கங்கள்,4 வெண்கலப் பதக்கங்கள் என வெற்றி வாகை சூடியுள்ளனர். அண்மையில் கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் அண்மையில் (22,23.09.2022) ஆகிய திகதிகளில் இடம் பெற்ற போட்டிகளிலேயே இவ்வாறு பதக்கங்களை சுவீகரித்துள்ளனர்.திருகோணமலை மெய்வல்லுனர் சம்பியனாகவும் வெற்றியை தனதாக்கியதுடன் தேசிய மட்ட போட்டிக்கும் பங்கேற்கவுள்ளனர்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதளுக்கிணங்க விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம். ஹாரிஸ் சிறப்பாக வழிநடாத்தியதுடன் இவர்களுக்கான பயிற்சியையும் வழங்கியிருந்தார். மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் தலைமையில் குறித்த விளையாட்டுக்கள் அனைத்தும் திறம்பட செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் இவ் நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவத்துக்கு கிழக்கு மாகாண ஆளுனர் அநுராதா யஹம்பத் கலந்து கொண்டார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஆரையம்பதியில் முன்னெடுப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய இன்று காலை பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை மட்டக்களப்பு ஆரையம்பதியில் மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரா.சாணக்கியன், அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதுக் குறிப்பிடத்தக்கது.